


17. 06. 2025

தலைப்பு செய்திகள்

கனடாவில் நடைபெறும் 51-வது, ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்றுமாலை பங்கேற்கிறார்.

ரயில்வேயின் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டு உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இயற்கை பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுவதன் அவசியத்தை மத்திய சுற்றுசூழல் அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தினார்.

தமிழகத்தில் அடுத்த ஓராண்டிற்குள் 70 லட்சம் லிட்டர் பால் கையாள்வதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படும் என்று மாநில பால் வளத்துறை அமைச்சர் திரு.மனோதங்கராஜ் தெரிவித்துள்ளார்.

பேட்டரி மூலம் இயக்கப்படும் பேருந்துகளின் சேவை இன்னும் 10 நாட்களில் சென்னையில் தொடங்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. S.S.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி கனடா நாட்டின் Kananas kis நகரில் 51-வது, ஜி-7 உச்சிமாநாட்டில் இன்றுமாலை பங்கேற்கிறார்.

சைப்ரஸ் பயணத்தை முடித்துக்கொண்டு 2-வது கட்டமாக கனடா சென்றடைந்த பிரதமர், எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம், கட்டமைப்பு, முதலீடு குறித்த விவாதங்களில் கலந்துகொள்கிறார்.

கனடா பிரதமர், மார்க்கார்னே உட்பட ஜி-7 நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்கிறார்

இந்நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இன்று கேல்கரி சென்றடைந்த பிரதமர், தென்நாடுகளின் உயர்முன்னுரிமைகள் குறித்து தாம் இம்மாநாட்டில் எடுத்துரைக்கவுள்ளதாக சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் முதல்முறையாக பிரதமர் கனடா சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

அஷ்விணி வைஷ்ணவ்

ரயில்வேயின் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டு உள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்

ஹரியானா மாநிலம் மானேசரில் நாட்டின் மிகப்பெரிய பல்முனை சரக்கு முனையத்தை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், 108 சரக்கு முனையங்கள் விரைவில் சேவைக்கு கொண்டுவரப்படும் என்று குறிப்பிட்டார்.

சீர்த்திருத்தங்களின் மூலம் திட்ட நடைமுறைகளை எளிதாக்கியதால் குறைந்த காலத்தில் சாதனைகளை நிகழ்த்த முடிவதாக அவர் எடுத்துரைத்தார்.

தூய்மையையும், சுகாதாரத்தையும் அனைவரும முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

இயற்கை பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுவதன் அவசியத்தை மத்திய சுற்றுசூழல் அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தினார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் பாலைவனம் மற்றும் வறட்சியை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பான கருத்தரங்கில் இன்று உரையாற்றியஅவர், இயற்கைக்கு மாற்றாக புதிதாக ஒன்றை உருவாக்க மனிதர்களால் இயலாது என்று குறிப்பிட்டார்.

இயற்கைக்கு எதிரான சீர்கேடுகள் நடைபெறுவதால் புவியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

எனவே இயற்கை வள ஆதாரங்களை பேணி பாதுகாப்பது மிக அவசியம் என்று குறிப்பிட்டார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தை முன்னெடுத்து செல்லவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் பேசுகையில் இயற்கைக்கும், அறிவியலுக்கும் இடையே சமன்பாடு நிலவவேண்டியதன் அவசித்தை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

ஈரான் இஸ்ரேல்

ஈரான் தலைநகர் டெஹ்ரானிலிருந்து இந்திய மாணவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை அங்குள்ள இந்திய தூதரகம் மேற்கொண்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சம் கூறியுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் நாடுகளுக்கு இடையில் பதட்டம் அதிகரித்து வரும் நிலையில், சிவிலியன் மற்றும் பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்த ஜி-7 நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்நாடுகள் இணைந்து ஒருங்கிணைந்த அறிக்கையில் மத்திய கிழக்கு பகுதியில் அமைதியும், ஸ்திரத்தன்மையையும் நிலைநிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளன.

ஈரானில் நிலவும் நெருக்கடிக்கு சுமூகத்தீர்வு எட்டுவதன் மூலம் கிழக்கு மத்திய பகுதியில் குழப்பங்கள் தணிந்து காசாவில் போர் நிறுத்தத்தை கொண்டுவருவதற்கான சூழலை எட்டமுடியும் என்று ஜி-7 நாடுகள் தெரிவித்துள்ளன.

❖❖❖❖❖❖❖

முருகன்

சுதந்திர போராட்ட தியாகி வாஞ்சிநாதன் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில், ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த வாஞ்சிநாதனின் தியாகத்தை இந்நாளில் போற்றி வணங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

...

நாட்டின் சுகாதாரத்துறை கடந்த 11 ஆண்டுகளில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

ஆயுஷ்மான் சுகாதார காப்பீடு திட்டத்தின் கீழ் 55 கோடிக்கும் மேற்பட்டோருக்கு நிதியுதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டமைப்பு, மக்களுக்கான சுகாதார திட்டங்கள் போன்றவைகளால் அனைவருக்கும் சுகாதார சேவைகள் எளிதில் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

மனோ தங்கராஜ்

தமிழகத்தில் அடுத்த ஓராண்டிற்குள் 70 லட்சம் லிட்டர் பால் கையாள்வதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படும் என்று மாநில பால் வளத்துறை அமைச்சர் திரு.மனோதங்கராஜ் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கான நவீன தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், கால்நடைகளுக்கான காப்பீடு 85 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதால், அனைத்து விவசாயிகளும் இதனை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

சிவசங்கர்

சென்னையில் பேட்டரி மூலம் இயங்கும் பேருந்துகள் விரைவில் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. S.S. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் புதிய வழித்தடங்களில் மினிபேருந்துகள் சேவையை இன்று தொடங்கிவைத்தது பேசிய அமைச்சர், காற்று மாசுபாட்டை குறைக்கும் வகையில் இப்பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக கூறினார்.

மினி பேருந்துகள் மலைப்பாங்கான பகுதிகளில் மட்டும் தற்போது இயக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

பெரம்பலூரிலும் புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தின் கீழ் 31 சிற்றுந்து சேவைகளை அமைச்சர் இன்று துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

சிவகங்கை மாவட்டம் திருபுவனம், கானூரில் வைகையாற்றின் குறுக்கே 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தடுப்பணையை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று பார்வையிட்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் மாவட்டத்தின் வளர்ச்சிப்பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

பல்வேறு துறைகளின் சார்பில் 465 பயனாளிகளுக்கு 24 கோடியே 27 லட்ச ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை திரு. உதயநிதி வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

KKSSR

தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 6 லட்சம் முதல் 7 லட்சம் வரை பட்டாக்கள் வழங்கப்படுவதாக, மாநில வருவாய் துறை அமைச்சர் திரு. KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று பேசிய அவர், கடந்த 4 ஆண்டுகளில் வருவாய் துறை மூலம், ஒரு கோடியே 60 லட்சம் பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

முன்னதாக நகர நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் மற்றும் மறு நில அளவை திட்டத்தை அமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

தமிழகத்தில் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டப் பணிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

நெல்லையில் அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணனுடன் இணைந்து 8 புதிய வழித்தடங்களில் மினி பேருந்து வசதிகளை திரு. நேரு இன்று தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து திருச்செந்தூரில் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழாவிற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பார்வையிட்டார்.

அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும் என்று உறுதியளித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், திருச்செந்தூர் வரி குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

எ.வ. வேலு

திருப்பத்தூர் மாவட்டம் காமனூர்தட்டு பனங்காட்டேரி, ஊட்டல், சொத்தமலை, உள்ளிட்ட மலைகிராமங்களுக்கு புதிய மினி பேருந்து சேவைகளை மாநில பொதுப்பணி துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

நவநீத சேவை வாய்ஸ்

தஞ்சையில் பிரசித்தி பெற்ற 16 நவநீத சேவை இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இது குறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்மழை காரணமாக, பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால், கோதையாறு, தாமிரபரணி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால், சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க இன்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

சுருளி அருவி

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கனமழை காரணமாக தேனி மாவட்டம் சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது

இதனால் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நீலகிரி

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் அவலாஞ்சி, அப்பர்பவானி கூடலூர், பந்தலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பரவலாக சாரல்மழை பெய்துவருகிறது.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருதி வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தொட்டபெட்டா காட்சிமுனை, அவலாஞ்சி, பைன் பாரஸ்ட் உள்ளிட்ட பல்வேறு பகுததிகள் இன்று தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

அணைகள்

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்துள்ளது.

அமராவதி அணை அதன் முழுகொள்ளளவை எட்டியதை அடுத்து அணையிலிருந்து வினாடிக்கு 7 ஆயிரத்து 500 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழையால் முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து 4 ஆயிரத்து 788 கனஅடியாக அதிகரித்துள்ளது.

வெள்ளப்பெருக்கு காரணமாக குற்றாலத்தின் அனைத்து அருவிகளிலும் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை 3-வது நாளாக இன்றும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று 6 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஹாக்கி இந்தியா மகளிர் மாஸ்டர்ஸ் கோப்பை போட்டிகள் சென்னையில் நாளை தொடங்குகின்றன.

முதல் ஆட்டத்தில் ஹிமாச்சல் - மஹாராஷ்டிர அணிகள் நாளை மோதுகின்றன.

வரும் 27-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் தமிழகம், கேரளா, கர்நாடகா, ஒடிசா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖